**ஹப்புதளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஹப்புதளை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கடந்த ஆண்டில் கிடைக்க வேண்டியிருந்த மாட்டிறைச்சி கடை வாடகை மற்றும் வர்த்தக கடை வாடகை ரூபா 231,229 தொகை குறைவாக கணக்கீடு செய்திருந்த தவறினை சரிசெய்யும் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமையால் அந்தப் பெறுமதியினால் திரண்ட நிதியக் கணக்கு மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொண்டிருந்த பண்டக் கணிப்பீட்டின் மூலம் இனங்கண்டு 2018 பெப்ரவரி 19 திகதி ஏல விற்பனவில் விற்பனை செய்திருந்த ரூபா 36,665 இற்கான 21 வகையான பண்டங்கள் ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்படாமல் அந்தத் தொகை வருமானச் செலவிற்கு கணக்கீடு செய்திருந்தமையால் மிகை அப்பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளிடையே இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசங்களின் பெறுமதி ரூபா 4,338,728 காணப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 27,561,939 தொகைக்கான பெறவேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடம் நிலுவையாக காணப்பட்ட வீதவரி ரூபா 199,557 தொகை, எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டம் ரூபா 13,832 தொகை,

கடை வாடகை ரூபா 716,158 தொகை 02 வருடங்கள் நிலுவையாகவுள்ள ஏனைய வருமானங்கள் ரூபா 389,983 தொகை, வாகன வரி ரூபா 681,829 தொகை மற்றும் நிலுவை நிர்மாண வேலை உதவி ரூபா 25,560,580 தொகை அடங்கியுள்ளன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில உள்ளவாறு ரூபா 28,896,196 தொகை செலுத்த வேண்டிய மீதி 02 வருடங்களையுடைய நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 27,714,812 தொகை மற்றும் 01 வருடத்தை உடைய செலவு கடன் கொடுத்தோர் ரூபா 1,181,384 தொகை என்பவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

காணி உறுதிகள் , நில அளவைப்பத்திரங்கள் மற்றும் கொடுப்பனவு பத்திரம் உட்பட தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 75,854,579 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு/ மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| (i) பிரிவுகள் 49 மற்றும் 52 | - | 2017 ஆண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 28 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் இனங்கண்டிருந்த போதிலும், அவற்றை தீர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) பிரிவு 134(2) | - | முன்னேறிய பிரதேசங்களில் அல்லது பகுதிகளின் அபிவிருத்தி மட்டத்தை கவனத்தில் எடுத்து வீதவரி தீர்மானிக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | | ஆண்டிற்கு ஒரு முறையேனும் காணிகள் மற்றும் கட்டிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் 2016 மற்றும் 2017 ஆண்டுகள் தொடர்பாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 | 49,274 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 10 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணி கடன் மீதியை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவை | | |
| | (i) நிதிப் பிரமாணம் 371 | 31,700 | நிமித்த முற்பண குறிப்பிட்ட விடயம் முடிவடைந்த உடன் தீர்க்கப்பட வேண்டும் எனினும், 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்க்கப்படாத முற்பணம் காணப்பட்டது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 571 | 233,021 | பொது வைப்பு கணக்கில் இரண்டு வருடங்களை மிகைத்துள்ள 09 வைப்புகளை தீர்த்திருக்கவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | - | 2017 ஆண்டின் போது 04 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | உள்ளூராட்சி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சந்தை கடைகளின் மாதாந்த வாடகை 05 வருடங்களுக்கு ஒரு முறை அரச பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும், சபைக்கு சொந்தமான 42 கடைகள் தொடர்பாக அவ்வாறான பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல், சபையினால் தீர்மானிக்கப்பட்ட மாதாந்த வாடகை அறவிடப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,583,012 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,598,636 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காணப்படுகின்றன

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 669,900 | 669,900 | 1,020,219 | 199,754 | 619,900 | 619,900 | 701,427 | 127,681 |
| (ii) வாடகை | 6,106,935 | 6,106,935 | 6,454,842 | 716,157 | 5,741,521 | 5,741,521 | 6,305,063 | 191,560 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 615,300 | 615,300 | 794,675 | -- | 540,300 | 540,300 | 563,978 | 6,950 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 47,774,005 | 47,774,005 | 78,173,723 | 3,129,570 | 43,133,757 | 43,133,757 | 46,699,304 | 12,387,335 |
| மொத்தம் | 55,166,140 | 55,166,140 | 86,443,459 | 4,045,481 | 50,035,478 | 50,035,478 | 54,269,772 | 12,713,526 |

#### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 55.2 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 86.4 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எவ்வாறாயினும் வருட இறுதியளவில் ரூபா 4.0 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 68.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,160,879 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 3,488,600 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக 2017 ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) சுற்றாடல் சார் சிக்கல்கள்**

1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இல் 53 இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த 02 வியாபாரங்கள் தொடர்பாக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காததுடன், 2017 ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக வருடாந்த கணிப்பீடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோள்களுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2018 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

ஹபுதளை பிரதேச சபை அதிகார பிரதேசத்தை சேர்ந்த தியதளாவ பதன எனப்படும் காணியின் 8.75 பர்சஸ்களை கொண்ட இரண்டு காணி துண்டுகள் உடன்படிக்கைகள் மேற்கொள்ளாமல் இரண்டு வெளித்தரப்பினர்களுக்கு வாடகை அடிப்படை வழங்கியிருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணியில் மூன்று வெற்றிடங்கள் மற்றும் 19 மிகைகள் காணப்பட்டது.

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகை திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 7,022,644 தொகைக்கான சமூக அடிப்படை ஒப்பந்தவேலைகள் 11 சமூக அமைப்புகளை தெரிவு செய்யும் போது பெறுகை குறிக்கோள்களை நிறைவேற்றும் விதத்தில் செயற்பட வேண்டும். இதற்காக பிரதேச செயலாளரின் நியமனம் செய்யப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் மேற்பார்வையின் மூலம் குறிப்பிட்ட சமூக அமைப்புகளை மதிப்பாய்வு செய்ய வேண்டும் எனினும், அவ்வாறு செய்யாமல் சமூக அடிப்படை அமைப்புகளை தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறுகை நடவடிக்கை கோவையின் 3.9.1 பந்தியின் பிரகாரம் ஒரே சந்தர்பத்தில் சங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய மொத்த ஒப்பந்த வேலைகளின் எண்ணிக்கை மூன்றினை மிகைக்கக் கூடாது எனினும், பிரதேச சபையினால் கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு செயற்திட்டங்களை வழங்கும் போது மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு புறம்பாக நான்கு நிர்மாண வேலைகளுக்காக ஒரே தடவையில் உடன்படிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செவுகளுடன் இணக்கம் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுபாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2017 ஆண்டின் போது பிரதேச சபை தொடர்பாக போதியளவு உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை. |
| | | (ii) | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை சரியான முறையில் இனங்கண்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஒப்பந்த வேலை நிருவாகம் | (i) | ஒப்பந்த வேலை பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளக கட்டுபாடு | (i) | பிரதேச சபை முறைப் பிரகாரம் உள்ளக பரிசோதனை முறை ஒன்றிற்கு ஆளாகும் விதமாக ஒவ்வொரு உத்தியோகத்தறிற்கும் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கும் வகையில் கடமைகள் சாட்டப்பட்டிருக்காமை. |
| (ஈ) | இருப்பு கட்டுபாடு | (i) | கலஞ்சிய கட்டுபாடு முறைப்படி மேற்கொள்ளாமை மற்றும் ஆவணங்கள் பேணப்பட்டிருக்காமை. |
| (உ) | வாகன கட்டுபாடு | (i) | மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் விபரங்கள் எழுதப்பட்டிருக்காமை. |
| | | (ii) | வாகனங்களின் பராமரிப்பு தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையினை பெற்றிருக்காமை. |